

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | நவம்பர் 24, 2016 | புரட்சி 15 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00


## 3000 தோழர்கள் சிறையில் வாடிய மகத்தான வரலாறு

# 1957 நவம்பர் 26 ஜாதி ஒழிப்பு நாள்

***1957 நவம்பர் 26இல் பெரியார் இயக்கம் ஜாதி ஒழிப்புக்காக சட்டத்தை எரித்த நாள். 3000 தோழர்கள் 6 மாதம் முதல் 3 ஆண்டு வரை சிறைத் தண்டனை பெற்றனர். அந்த நாள் நினைவாக சில வரலாற்றுக் குறிப்புகள்.***

இன்றைக்கும் போர் வீரர்களின் நினைவுக் கல்வெட்டுகளில் அவர்களுடைய பெயர்கள் தெரியாத காரணத்தால் ‘பெயர் தெரியாமல் மரித்துப் போன போர் வீரர்கள்’ என்று எழுதப்படுவது வழக்கம். அதேபோல் பெரியார் நடத்திய ஜாதி ஒழிப்புக்கான அரசியல் சட்ட எரிப்புப் போரில் பங்கேற்று மாதக் கணக்கில் சிறைக் கொடுமைகளை அனுபவித்த பெயர் தெரியாத தோழர்கள் பலர் உண்டு.

சட்ட எரிப்புப் போரில் பங்கேற்ற பெரியாரின் கருஞ்சட்டைத் தொண்டர்களின் உறுதிமிக்க தியாக வரலாற்றிலிருந்து சில செய்திகள்:

- சிறையிலிருந்த தோழர் திருவாரூர் முத்துகிருட்டிணனின் மனைவிதான் அவரது கடையையும் குழந்தைகளையும் கவனித்துக் கொண்டார். காலராவினால் திடீரென முத்து கிருட்டிணன் மனைவி இறந்து விட்டார். மனைவிக்கு இறுதி மரியாதை செலுத்த முத்துகிருட்டிணன் பரோல்கூட கேட்கவில்லை. தாய் இறந்த நிலையில் சிறுவர், சிறுமிகளாக இருந்த குழந்தைகளை கவனித்து வந்த மாமியாரும் அவரைத் தொடர்ந்து காலராவில் இறந்தார். திக்கற்று நின்ற அந்தக் குழந்தைகளை கழகத் தோழர்களே, முத்துக் கிருட்டிணன் சிறை மீண்டு வரும் வரை தங்கள் குடும்பங்களில் வளர்த்தனர். தோழர் முத்துகிருட்டிணன் விடுதலை பெற்று வெளியே வந்தபோது, திருவாரூர் வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அந்த ஜாதி ஒழிப்பு வீரரைக் கண்ட மக்கள் கண்ணீர் வடித்தனர்.
- 16 வயதே நிரம்பிய திருச்சி வாளாடியைச் சார்ந்த சிறுவன் பெரியசாமி, பெரியார் கூட்டங்களுக்கு தவறாமல் சென்று வரும் கருஞ்சட்டைத் தொண்டன். சட்டத்தை எரித்தான். நீதிமன்றம் அந்த சிறுவனுக்கு விதித்த தண்டனை இரண்டு ஆண்டுகள். தூத்துக்குடி தட்டப்பாறை சிறுவர் சிறையில் அடைக்கப்பட்டான். ஏழைத் தாய்க்கு ஒரே மகன். பொருள் வசதி இல்லாமையால் மகனை ஒருமுறைகூட சென்று அவரது தாயால் பார்க்க முடியவில்லை. அப்போது தமிழக ஆளுநராக இருந்த ஆளுநர் விஷ்ணுராம் மேதி, சிறையைப் பார்வையிட வந்தவர், சிறுவனின் போராட்டம் பற்றி அறிந்து வியந்து, மொழி பெயர்ப்பாளர் வழியாகக் கேட்டார். “உன்னை மன்னித்து விடுதலை செய்கிறேன்; இனிமேலாவது இதேபோல் சட்டத்தை எரிக்காமல் இருப்பாயா?” சிறுவன் கூறினான்: “வெளியே அனுப்பினால் மீண்டும் எரிப்பேன்.” வியந்துபோன ஆளுநர், “கடவுள் உன்னை ஆசீர்வதிக்கட்டும்” என்று கூறி நகர்ந்தார். சிறையில் மோசமான உணவு, கோடை வெய்யிலைத் தாங்க முடியாமல் வயிற்று உபாதைக்கு உள்ளானான், பெரியசாமி. நினைவிழந்த நிலையிலும் உறுதியாகப் பிணை கோர மறுத்து சிறையிலேயே மாண்டான்.
- திருச்சியைச் சேர்ந்த தோழர் மாணிக்கத்துக்கு, ஓராண்டு சிறை தண்டனை. திருமணமான ஒரே வாரத்தில் போராட்டத்துக்கு வந்துவிட்டார். சிறைக்கு நேர்காண லுக்கு வந்த இளம் மனைவி, கண்ணீர் விட்டு கதறினார். ‘இனி நேர்காணலுக்கு வரவேண்டாம்’ என்று கூறி விட்டார் மாணிக்கம். மனம் உடைந்த இளம் மனைவி, கணவர் கைவிட்டதாகவே அஞ்சி, மனநோய்க்கு உள்ளாகிவிட்டார். ஓராண்டுக்குப் பிறகு விடுதலையான மாணிக்கம், முழுமையான மனநோயாளியாகிவிட்ட மனைவியுடன், ஒருவார மணவாழ்க்கை நினைவு களுடனேயே வாழ்ந்து மனைவிக்கு முன்பே மரணத்தைத் தழுவினார்.
- திருவாரூரில், உறுதிமிக்க நீண்டகால பெரியார் தொண்டர்கள் சிவசங்கரன், முத்துகிருட்டிணன் பெரியார் இயக்கத்தில் கலைஞர் இருந்த காலத்தில் அவரது நெருங்கிய தோழர்கள். இவர்கள் சிறையி லிருந்தபோது இருவரின் மனைவியரும் வெவ்வேறு காலங்களில் நோய்வாய்ப்பட்டார்கள். ‘பரோலில்’ வெளியே வருவது ‘கோழைத்தனம்’ என்ற சிந்தனை ஓட்டமே அன்று கழகத் தோழர்களிடம் மேலோங்கி யிருந்தது. இருவரும் பரோல் கேட்க மறுத்தனர். சிறையிலிருக்கும்போதே இருவரது மனைவியரும் இறந்துவிட்டனர். “உயிரோடு இருக்கும்போதே பார்க்க வில்லை; பிணத்தைப் போய் பார்த்து என்னவாகப் போகிறது?” என்று சிறையில் கண்ணீர்விட்டபடியே அன்றைய சிறைச்சாலை வேலைகளைப் பார்க்கப் போய்விட்டார்கள் இருவரும். (தோழர் சிவசங்கரன் - 1975ஆம் ஆண்டு அவசர நிலை காலத்திலும் ‘மிசா’வில் கைது செய்யப்பட்டு ஓராண்டு திருச்சி சிறையில் இருந்தார்)
- அந்தக் காலத்து சிறை என்பது கொடுமையானது. சிறை சீர்திருத்தங்கள், கைதிகளுக்கான உரிமைகள் என்ற சிந்தனைகளே உருப்பெறாத காலம். கருஞ்சட்டைத்

(4ஆம் பக்கம்)

## பெரியார் முன்கூட்டியே கைதானார்!

1957 நவம்பர் 26 – சட்ட எரிப்புக்கு முதல் நாள் பெரியார் திருச்சியில் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு விட்டார். இது குறித்து ‘விடுதலை’ ஏடு வெளியிட்ட செய்தி:

ஜாதி ஒழிப்புக்கு, பெரியார் கொடுத்த 15 நாள் கெடு 18.11.57 அன்று முடிவடைந்தது. எந்தப் பயனும் இல்லாததால் நவம்பர் 26இல் சட்டம் கொளுத்தும் போராட்டம் உறுதி செய்யப்பட்டு விட்டது. 26.11.57 அன்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் அச்சடிக்கப்பட்ட தாள் கட்டினை எரிக்க நாடு முழுவதும் தோழர்கள் பெயர்கள் பட்டியல் தந்து போராட்டத்திற்கு ஆவலாக அணியாயிருந்தனர்.

பெரியார் அவர்கள், 25.11.57 இல் சீரங்கம் பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு விரைவுத் தொடர் வண்டி (எக்ஸ்பிரஸ்) மூலம், சென்னைக்கு வந்து நவம்பர் 26இல் சென்னையில் எழும்பூர் பெரியார் திடல் (டிராம் ஷெட்) கூட்டத்தில் பேசி இறுதி யில், அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தத் திட்டமிட் டிருந்தார்கள்.

இந்நிலையில், 25.11.57 மாலை பெரியார் அவர்கள், அவரது புத்தூர் மாளிகையிலிருந்து சீரங்கம் பொதுக் கூட்டம் பேசப் புறப்பட்டு ஆயத்தப் படுகையில், திருச்சிக் காவல் துறைக் கண் காணிப்பாளர் (சூபரின்டென்ட்) திரு. எஸ். சோலையப்பன் அவர்கள் பெரியார் மாளிகை வந்து மாலை 6.40 மணிக்கு பெரியார் அவர்களைக் கைது செய்தார். கிரிமினல் சட்டப்பிரிவு 151இன்படி (குற்றங்களைத் தடை செய் தலுக்கான சட்டப் பிரிவு). உத்தேசிக்கப்பட்ட நவம்பர் 26ஆம் நாள் அரசியல் சட்டப் புத்தகத்தைக் கொளுத்துவதைத் தடுப்பதற்காக, கைது செய்வதாகக் கூறி, கைது செய்து தமது உந்து வண்டி (கார்)யில் அழைத்துச் சென்றார். பின், கூடுதல் முதல் வகுப்பு நீதிபதி திரு. இராமச் சந்திரன் அவர்கள் முன்பாக, பெரியார் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு 3 நாள் ரிமான்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். பெரியார் அவர்கள் திருச்சி மத்திய சிறையில் வைக்கப்பட்டார். டிசம்பர் 9 வரை ரிமாண்டில் வைக்கும்படி அரசு தரப்பில் வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, 3 நாள் ரிமாண்டில் வைக்கப்பட்டு நிபந்தனையின் பேரில் வெளியில் இருக்க பெரியார் அனுமதிக்கப் பட்டார்.

திராவிடர் கழகம் செய்த தீர்மானத்திற்கிணங்கவும், பெரியார் அவர்களின் ஆணைக்கு இணங்கவும் ஜாதி ஒழிப்புக் கிளர்ச்சியின் முதல் கட்டப் போராட்டமாகத் துவங்கப்பட்ட அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் தமிழ் நாடெங்கும் 26.11.57 அன்று நடந்தேறியது.

சென்னை முதல் குமரி வரை சுமார் 10 ஆயிரம் பேர் கொளுத் தினர்.

## மேட்டூரில் ஒரு நாள் பயிலரங்கம்






**20-10-2016** அன்று காலை **11-00** மணியளவில் மேட்டூர் பாப்பாயம்மாள் திருமண மண்டபத்தில், சேலம் மேற்கு மாவட்ட கழக சார்பில் பயிலரங்கம் சிறப்புடன் நடந்தது. முற்பகல் அமர்வில் புலவர் செந்தலை கவுதமன் ”திராவிடர் இயக்க வரலாறு” என்ற தலைப்பில் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் கருத்துரையாற்றினார். அதன் பின்னர் தோழர்கள் எழுப்பிய அய்யங்களுக்கு விளக்கம் அளித்தார். மதியம் **2-00** மணிக்கு அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. மதிய உணவுக்குப் பின்னர் பிற்பகல் **3-00** மாணிக்கு தலைவர் கொளத்தூர் மணி “புதியக் கல்விக் கொள்கையும் பழைய குலக் கல்வித் திட்டமும் “ என்ற தலைப்பில் வகுப்பெடுத்தார். அய்யங் களைதலுக்குப் பின்னர் மாலை **5-30** மணியளவில் பயிலரங்கம் நிறைவுற்றது. பயிலரங்க ஏற்பாடுகளை மேட்டூர் நகரக் கழக செயலாளர் சுரேஷ்குமார், குமரேசன் ஆகியோர் சிறப்புற செய்திருந்தனர். வகுப்பின் துவக்கத்தில், திராவிடர் இயக்கத்தின் அடிவேரான தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனப்படும் அமைப்பின் தொடக்க நாளான **20-11-1916**இன் நூற்றாண்டு நிறைவு நாளான அதே **20-11-2016**இல் இப் பயிலரங்கம் நடைபெறுவது தனி சிறப்புக்குரியது என்பதை புலவர் கவுதமன் பெருமகிழ்வுடன் குறிப்பிட்டு வகுப்பினைத் தொடங்கினார்.

# நவ.26 ஜாதி ஒழிப்பு வீரர்கள் நாளில்... உரத்து சிந்திப்போம்!

**இளைய தலைமுறைக்கு ஒரு வரலாற்றுச் செய்தி. நவம்பர் 26, 1957 தமிழக வரலாற்றில் ஒரு முக்கிய நாள். அன்றுதான் ஜாதியை ஒழிக்க வேண்டும் என்ற புரட்சிகரப் போராட்டம் நடந்தது. போராட்டத்தை அறிவித்தவர் பெரியார். அது என்ன போராட்டம்?**

இந்தியாவின் அரசியல் சட்டத்தில் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை தீ வைத்து எரிக்கும் போராட்டம்.

அப்படி ஒரு போராட்டம் நடந்ததா என்று வியப்படையாதீர்கள். உண்மையில் நடந்தது. அரசியல் சட்டம் தமிழ்நாடு முழுதும் வீதிகளில் எரிக்கப்பட்டது. பெரியார் இயக்கத்தின் தொண்டர்கள் 10000 பேர் எரித்தார்கள். கைதானவர்கள் 3000க்கும் மேல். அவர்களில் பெண்கள், ஆண்களும் சிறுவர்களும் இருந்தார்கள். 3 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைப் பெற்றார்கள்.

மற்றொரு வியப்பான செய்தி தெரியுமா? இவர்கள் அனைவரும் பிணையில் வெளிவர மனு போட வில்லை; எதிர் வழக்காடவில்லை!

“ஆம் சட்டத்தை எரித்தோம்; நீதிமன்றம் வழங்கும் தண்டனையை ஏற்கத் தயாராக வந்துள்ளோம்” என்று நெஞ்சு நிமிர்த்தி சொன்னார்கள்.

அன்று சிறை வாழ்க்கை மிக கொடூரமானது. மோசமான உணவு; சுகாதாரமற்ற சிறை; அதுவும் இவர்கள் மீது போடப்பட்டதோ கிரிமினல் வழக்கு. இவர்களை சிறை நிர்வாகம் அரசியல் கைதிகளைப்போல் நடத்தவில்லை; கிரிமினல் குற்றவாளிகளாகவே நடத்தியது. அரைக்கால் சட்டை, அரைக் கைச் சட்டை, கிரிமினல் கைதிகளைப் போலவே சிறையில் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். இத்தனை துயரங் களை ஜாதி ஒழிப்பு இலட்சியத்துக்காக இன்முகத்துடன் ஏற்றார்கள். சிறைக் குள்ளே 5 தோழர்கள் பலியானார்கள். சிறையின் மோசமான உணவு, வெப்பம் காரணமாக நலிவுற்று விடுதலை பெற்ற ஒரு மாதத்துக்குள்ளேயே உயிரிழந்த வர்களையும் சேர்த்து களப்பலியானோர் 18 பேர். சிறை வாழ்க்கையோடு குடும்பத்தையே இழந்தவர்கள் ஏராளம்.

ஜாதி ஒழிப்புப் போராட்ட வரலாற்றில் தியாகங்களைச் சுமந்து நிற்கும் வரலாற்றுப் பக்கங்கள் இவை. பார்ப்பனர்கள் சமூகத்தில் திணித்த இந்த ஜாதியம் தான் இப்போதும் இந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு மிகப்பெரும் தடைச் சுவர்.

ஏன் இந்த ஜாதி? எதற்காக ஜாதிக் கலவரங்கள்?

குடும்ப உறவுகளையே கொன்று போடும் இந்த ஜாதி ஆணவக் கொலைகள் ஏன்?

சமூகத்தின் எதிர்காலத்தை உரு வாக்கப் போகும் இளைய தலைமுறை யின் சிந்தனைக்கு சில கருத்துகளை முன் வைக்கிறோம். மனம் திறந்து சிந்தியுங்கள்.

- நம்மை இப்போது அடையாளப் படுத்தும் ஜாதியை நாம் விரும்பி, நாமே தேர்வு செய்து கொண்டோமா, இல்லையே!
- விருப்பமில்லாத ஜாதியை உதறிவிட்டு, விரும்புகிற ஒரு ஜாதிக்கு மாறு வதற்கான வாய்ப்புகள் நமக்கு இருக்கிறதா? இல்லையே! தோழர்களே! இந்த அடையாளம் நம் மீது பரம்பரை பரம்பரையாக திணிக்கப்பட்டு வருகிறது!
- எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் எப்போதோ நம் மீது திணிக் கப்பட்ட இந்த அடையாளத்தை சுமந்து கொண்டு, நமக்கு நாமே ‘பெருமை’ பேசிக் கொண்டிருப்பது ஒரு நாகரிக சமூகத்தின் அடையாளமாக இருக்க முடியுமா?
- குருதிக்கு ஜாதி இல்லை. ஒரு ஜாதிக்காரன் குருதி இன்னொரு ஜாதிக்காரர் உடம்புக்குள் உயிர் காக்க ஏற்றப்படுகிறது.
- உடல் உறுப்புகளுக்கு ஜாதி இல்லை; விபத்தில் ‘மூளைச் சாவு’ அடைந்த ஒருவரின் உடல்உறுப்புகள் அப்படியே ஆண்-பெண் பாகு பாடின்றி வேறு ஒரு ஜாதிக்காரர் உடலுக்குள் பொருத்தப்படுகிறது. இங்கே ஜாதி பார்க்காமல் ஏற்றுக் கொள்கிறோம்.
- இயற்கை சீற்றங்களான புயலும், வெள்ளமும் ஜாதி பார்க்கிறதா? தண்டவாளம் விரிசலடைந்து தடம் புரளும் தொடர் வண்டிகள், ஜாதி பார்த்து பயணிகளை சாகடிக்கிறதா? நோட்டுக்களை மாற்றுவதற்கு வங்கிகள் முன் நாம் சோர்ந்து போய் நிற்கும் கியூ வரிசையில் ஜாதி இருக்கிறதா? எல்லாமே ஜாதி கடந்து தானே இருக்கின்றன.
- வர்த்தகங்களில் - சேவைகளில் ஜாதி இருக்கிறதா? இருக்கத்தான் முடியுமா? சொந்த ஜாதிக்காரர்களுக்கு மட்டுமே மருத்துவம் செய்வேன் என்று ஒரு டாக்டரோ, சொந்த ஜாதிக்காரர் களுக்கு மட்டுமே வியாபாரம் செய்வோம் என்று ஒரு வணிகரோ கூற முடியுமா? ஆனால் சொந்த ஜாதிக்குள் மட்டும்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறுவது என்ன நியாயம், தோழர்களே!

ஒரே நாட்டில் - ஒரே சமூகமாக - ஒரே அரசியலமைப்பில் - ஒரே சமூக வாழ்க்கைக்குள் - நாம் வந்த பிறகும், மனித சமூகத்தை கூறுபோட்டு, ‘நீ உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன்’ என்று பிறப்பிலேயே பேதப்படுத்தும் ஜாதி ஏன்?

அதன் பெயரால் கலவரம் ஏன்? அடிதடி ஏன்?

மனித மாண்போடு சிந்தியுங்கள்!

ஜாதி ஒழிப்புக்காக சட்டத்தை எரித்து சிறை புகுந்து, உயிர்ப்பலி தந்து, சொந்த வாழ்க்கையை இழந்த ஜாதி ஒழிப்பு வீரர்களின் நினைவு நாள் நவம்பர் 26!

60 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அதே நாளில் - நாம் சிந்திக்கவே இந்த அன்பான வேண்டுகோள்.

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

(தோழர்கள் துண்டறிக்கையாகப் பயன்படுத்தலாம்)

## மக்களுக்காக உண்டியலை திறந்து விட்ட பாதிரியார்!

நாடு இப்போது இருக்கும் இக்கட்டான இந்த சூழலில் ... இப்படி ஒரு அதிரடி அறிவிப்பை , ஒரு சர்ச் பாதிரியார் வெளியிடுவார் என எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது !

கொச்சி அருகே காக்கநாடு பூக்காடுபடியில் உள்ள மார்ட்டின் டி போரஸ் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடந்த சம்பவம் இது. அந்த சர்ச்சின் பாதிரியார்தான், இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த ஞாயிறு காலை பிரார்த்தனை முடிந்த பின், சற்று நேரம் அமைதியாக இருந்த அந்த சர்ச் பாதிரியார், சர்ச்சில் கூடி இருந்த மக்களை உற்று நோக்கினார். அவர்கள் முகத்தில் வெளிப்படையாக தெரிந்த கவலையை அவர் கண்கள் கண்டு கொண்டன.

“அன்பானவர்களே... நமது தேவாலயத்தின் உண்டியல் இன்று பிற்பகலுக்கு பின் திறக்கப்படும்.” பாதிரியார் இப்படி சொன்னவுடன், மக்கள் கொஞ்சம் திகைத்துப் போனார்கள். தொடர்ந்தார் பாதிரியார் :

“பணம் தேவைப்படுபவர்கள், தங்கள் தேவைக்கு ஏற்ப உண்டியலில் இருந்து பணம் எடுத்துக் கொள்ளலாம்.. நீங்கள் எடுத்த பணத்தை உங்களுக்கு எப்போது பணம் கிடைக்கிறதோ, அப்போது உண்டியலில் போட்டால் போதும்..”

அவ்வளவுதான் ...! அறிவிப்பைக் கேட்ட அனைத்து மக்களும் ஒன்று திரண்டனர் .

உண்டியல் திறக்கப்பட்ட ஒரு சில நிமிடங்களுக்குள், உண்டியலில் இருந்த ரூ.500, 1000 தவிர மீதி இருந்த அத்தனைபணமும் காலியாகிவிட்டது.

“ஏன் பாதர் இப்படி செய்தீர்கள் ... ?” என்று கேட்டதற்கு , அந்த பாதிரியார் கண்கலங்க சொன்ன பதில் :

“என்ன செய்வது... ? இந்த பகுதியில் உள்ள சாதாரண மக்கள்அரிசி வாங்ககூட சில்லறை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் அரிசி இல்லாமல் சிரமப்படும்போது, ஆண்டவருக்காக உண்டியலில் இலட்சக்கணக்கான பணம் இருந்து என்ன பயன் ?”

“சரி பாதர்... யார் யார் எவ்வளவு எடுத்துச் சென்று இருக்கிறார்கள் என்பது... ?”

“தெரியாது. அதற்கான கணக்கையும் நான் வைத்து கொள்ளவில்லை. இறை நம்பிக்கை உள்ள எல்லோரும், தாங்கள் எடுத்த பணத்தை உண்டியலில் திரும்பவும் கொண்டு வந்து போடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது” - என்றார் அந்த பாதிரியார். **( நன்றி : தினகரன் )**

## மனிதர்களை சாக்கடைக்குள் இறக்கும் அவலத்தை தடுத்து நிறுத்திய கழகத் தோழர்கள்

சாக்கடைக் குழிக்குள் மனிதர்களை இறக்குவதை சட்டம் தடை செய்தாலும் நடைமுறையில் அரசு நிறுவனங்களே மீறிக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சி, சாக்கடையில் மனிதர்கள் இறங்குவதைக் கண்டு கொள்வதே இல்லை. ஒப்பந்தக்காரர்களிடம் இந்தப் பணியை ஒப்படைத்து விட்டதாகக் கூறி தப்பி விடுகிறது. இந்த நிலையில் கடந்த 19ஆம் தேதி சாக்கடைக் குழியில் தொழிலாளர்கள் இறங்கியதை கழகத்தோழர்கள் தடுத்து நிறுத்தி ஒப்பந்தக்காரர் மீது காவல் துறையிலும் புகார் கொடுத்து வழக்கு பதிய செய்துள்ளனர். இது குறித்த செய்தி:

சென்னை மாவட்டம் 123 ஆவது வட்டத்தில் சில துப்புரவு தொழிலாளர்கள் பாதாளச் சாக்கடைக்குள் இறங்கி வேலை செய்து கொண்டிருந்தனர். அந்த பக்கமாக சென்ற திராவிடர் விடுதலைக் கழகம் மயிலை பகுதி தோழர்கள் அதை கண்டவுடன் அவர்களை தடுத்து நிறுத்தி, அவர்களை வேலை வாங்கிய ஒப்பந்தக்காரர் பிரகாசு மற்றும் மாநகராட்சி அதிகாரி சுந்தர்ராஜன் இருவரிடமும் தோழர்கள் கேள்விகளை முன் வைத்து வாதத்தில் ஈடுபட்டனர்.

உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி கழிவுகளை அகற்ற பாதாளச்சாக்கடையில் மனிதர்களை பயன்படுத்தாமல் இயந்திரங்களையே பயன்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கூறினர். அவர்கள் இருவரும் அங்கிருந்து ஓடிவிட்டனர்.

தோழர்கள் தொழிலாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கி விட்டு, ஓடிய இருவர் மீதும் மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் தரவே காவல் துறை சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தது. தப்பி ஓடிய ஒப்பந்தக்காரர் காவல் நிலையம் வரவழைக்கப்பட்டார்.

காவல்துறையினரும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறி புகாரைப் பதிவு செய்தனர். முழக்கம் உமாபதி புகார் மனுவை தந்தார். தோழர்கள் மாரி, நாத்திகன் உடனிருந்தனர்.

மயிலைப் பகுதி மக்கள் தோழர்களின் செயலை பாராட்டியதோடு, இந்த பிரச்சனையில் நம் தோழர்களுக்கு உறுதுணையாகவும் களத்தில் நின்றனர்.

# நவ.27 – மாவீரர் நினைவு நாள்

1989ஆம் ஆண்டு இந்திய இராணுவம், ஈழத்தில் தமிழர்களை கொன்றொழித்துக் கொண்டிருந்த காலகட்டம். அப்போது மேதகு பிரபாகரன், இந்திய இராணுவத்தின் தீவிரத் தேடுதலில் இருந்தார். தமிழீழக் காடு ஒன்றில் தலைமறைவாக இருந்த பிரபாகரன், அங்கிருந்து தான் முதன்முதலாக ‘மாவீரர் நாள்’ திட்டத்தை அறிவித்தார்.

“இந்த வருடத்திலிருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக ஒரு வருடத்தில் நினைவு கூர்ந்த அந்த நாளையே மாவீரர் நாளாக பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவது வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமான இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப் பட்டவர்களைத்தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலை காலத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்துப் பார்த்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் **எல்லா போராளிகளும் சமம்** என்னும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட நாம் முடிவு செய்துள்ளோம்”

– என்று அறிவித்தார்.

ஈழத் தமிழர் பிரச்சினை, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பிறகு புதிய பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது. அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் இதில் தலையிட்டுள்ளது. அரசியல் முன்னெடுப்புகள் குறித்து அய்.நா.வுக்கு விளக்கம் அளிக்கும் கட்டாயத்துக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டிருக்கிறது. இத்தகைய இக்கட்டான அரசியல் சூழல்களில் ஈழ விடுதலையை முன்னெடுக்கும் அணுகு முறைகளை ஆண்டுதோறும் மேதகு பிரபாகரன் நிகழ்த்தி வந்த மாவீரர் நாள் உரைகளில் நாம் பார்க்க முடியும்.

விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் போர் நிறுத்தம் செய்த காலத்தில் “இடைக்கால தன்னாட்சி அதிகார சபை”க்கான வரைவுத் திட்டத்தை சர்வதேச சட்ட நிபுணர்களைக் கொண்டு உருவாக்கியது. சர்வதேச சட்ட நிபுணர்களில் பாராட்டுதல்களைப் பெற்ற வரைவுத் திட்டம் அது. அத்திட்டம் அன்றைய இரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு, ஊடகங்களுக்கும் விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தினார்கள். திட்டத்தை இரணில் ஆட்சி புறந்தள்ளவில்லை. இது வரை சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களிலேயே வித்தியாசமானது என்று கூறி பேச்சு வார்த்தைகளைத் தொடங்கவும் தயாராகியது. ஆனால் அப்போது அதிபராக இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா. இரணிலிடமிருந்து பாதுகாப்புத் துறை உள்பட மூன்று துறைகளை ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி பறித்துக் கொண்டு, இந்தத் தீர்வுத் திட்டத்தை முடக்கினார். தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதே முக்கியம். இடைக்காலத் தீர்வு அல்ல என்றார் சந்திரிகா. அந்தச் சூழலில் 2004ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் மேதகு பிரபாகரன் முன்வைத்த கருத்துகள் இன்றைய சூழலுக்கு மிகவும் பொருந்தி வருவதாகும். அவரது உரையிலிருந்து ஒரு பகுதி:

“இரணில் விக்ரமசிங்கா அரசாங்கத்துடன் நாம் நிகழ்த்திய பேச்சு வார்த்தை



### தேசியத் தலைவரின் வழிகாட்டும் உரைகள்!

யின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன் வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன்பேச்சுக்களைத் தொடங்கலாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால், எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணை பிரியாத அங்கமாக அமைய வேண்டும் என வலியுறுத்துகிறது. **நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டி நிற்க, சந்திரிகாவின் அரசு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பற்றி பேச விரும்புகிறது.**

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெற வேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்ட காலமாகத் தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர் வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந் தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும் அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

போர் நிறுத்தம் செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்திய போதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்க முடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கி வருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்ட வேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன் வைத்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவ வேண்டுமென நாம் விரும்புகின்றோம்”

– என்று மாவீரர் நாள் உரையில் பிரபாகரன் கூறினார்.

ஆயுதம் தாங்கி போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே ஈழத் தமிழர் விடுதலையை முன்னெடுத்து பிரபாகரன் மேற்கொண்ட தெளிவான அணுகுமுறையாக ‘இடைக்கால நிர்வாகச் சபை’ திட்டத்தை முன் வைத்ததாகும்.

முள்ளிவாய்க்கால் படுகொலைக்குப் பிறகு, மக்கள் வாழ்வாதாரம் இழந்து, இராணுவ முற்றுகைப் பிடியில் தவிக்கும் சூழலில் மேதகு பிரபாகரன், 2004ஆம் ஆண்டு மேற்கொண்ட அணுகுமுறை, தெளிவான வெளிச்சத்தைக் காட்டுகிறது.

மாவீரர் நாளில் அந்த மகத்தான வீரர்களின் தியாகத்துக்கு நாம் காட்டும் மரியாதை என்பது, அவர்கள் வரித்துக் கொண்ட இலட்சியத்தை முன் நகர்த்தலேயாகும்.

உணர்ச்சிகர மொழிகளிலும் சொல்லாடல்களிலும் மூழ்கி நிற்பதில் பயன் இல்லை.

அரசியல் களத்தை விடுதலைக்கான களத்தை நோக்கி நகர்த்துவதே இப்போதுள்ள முதன்மைப் பணி.

மாவீரர்களை வணங்கி பயணத்தைத் தொடருவோம்!

## எண்ணூரில் மதவாத எதிர்ப்பு கருத்தரங்கம்

*சென்னை மாவட்டம் எண்ணூர் கத்திவாக்கத்தில் அமைந்துள்ள சிந்தனை சிற்பி சிங்காரவேலர் படிப்பகம் சார்பாக 20.11.2016 அன்று மாலை “மதவாதம் - கல்வி வியாபாரக் கொள்கைக்கு எதிராக பொது வெளி கருத்தரங்கம்” அரிகரன் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.*




*இந்த நிகழ்ச்சியில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் “ஆட்சியில் இந்துத்துவம்: விளைவுகள் - சவால்கள்” என்ற தலைப்பில் ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார். இந்துத்துவம் இந்து என்று சொல்லப்படுகிறவர்களுக்கு எப்படியெல்லாம் கல்வி தர மறுக்கிறது என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் முன் வைத்தது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, புதிய கல்விக் கொள்கையின் பேராபத்துகள் குறித்து விரிவாகப் பேசினார். தோழர் பகத்சிங் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் வழக்கறிஞர் திருமூர்த்தி மற்றும் சென்னை மாவட்டத் தோழர்கள் கலந்துக் கொண்டனர்.*

**செய்தி: செந்தில்** FDL

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# டிச.24–சேலத்தில் 'வேத மரபு மறுப்பு மாநாடு'

# தோழர்களே தயாராவீர்!


டிசம்பர் 24இல் பெரியார் நினைவு நாளில், சேலத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒரு நாள் மாநாடு.

**"சித்தர்கள்–வள்ளலார்–பெரியார்–அடிச்சுவட்டில்...**

## 'வேத மரபு' மறுப்பு மாநாடு

காலை முதல் இரவு வரை கருத்தரங்குகள் - பேரணி - பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சிகள்.

கழகத்தின் வளர்ச்சிக்கான கட்டமைப்பு நிதி - முதல் தவணையாக கழகத் தலைவரிடம் வழங்கப்படுகிறது.



'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு முதல் தவணையாக 5000 சந்தாக்கள் வழங்கப்படுகிறது.

கழகத்தின் புதிய 'மாத இதழ்' வெளி வருகிறது.

தமிழகத்தின் சிந்தனையாளர்கள் - பேச்சாளர்கள் - தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

வேத மதமான பார்ப்பன மதத்தை பார்ப்பனர்கள் - பார்ப்பனரல்லாத மக்கள் மீது திணித்தார்கள். 'இந்துக்கள்' என்று பெயர் சூட்ட வைத்தார்கள்.

வேத மதத்துக்குள் வெகு மக்களை இழுத்துக் கொண்டவர்கள் அந்த மக்களின் சுய மரியாதையை மறுத்தார்கள். ஜாதிகளைத் திணித்து ஒடுக்கு முறை கட்டமைப்பை உறுதி செய்தார்கள்.

தீண்டாமைக்கு எதிராக - இட ஒதுக்கீட்டு உரிமைக்காக பெண்ணுரிமைக்காக நடந்த போராட்டங்கள் எல்லாம் இந்த மண்ணில் வேத மரபுக்கு எதிராக நடந்த போராட்டங்கள்தான்!

வேத மரபுக்கு எதிர்ப்பு - வேத காலத்திலேயே தொடங்கி விட்டது. வேதங்களின் பார்ப்பனிய கொடுமைகளை - 'சார்வாகர்கள்' எதிர்த்தார்கள்; சித்தர்கள் எதிர்த்தார்கள்; புத்தர் எதிர்த்தார்; சமணம் எதிர்த்தது; வடலூர் இராமலிங்க அடிகளார் எதிர்த்தார்.

எதிர்ப்பாளர்களை செரிமானம் செய்து ஏப்பம் விட்டது பார்ப்பன 'வேத மரபு'.

ஆம்! பெரியார் மட்டுமே பார்ப்பனியத்தால் செரிக்க முடியாத ஒரே தலைவர்!

சார்வாகர்களும் - சித்தர்களும் புத்தரும் வடலூர் வள்ளலாரும் பெரியாரும் போராடிய அடிச்சுவட்டில் - வேத மரபு மறுப்புப் போராட்டத்தை தொடரவும் - சமூக நீதியையும் சமத்துவத்தையும் ஓங்கி ஒலிக்கவுமே இந்த மாநாடு.

**வேத மரபை மறப்போம்!**

**வெகுமக்கள் உரிமை மீட்போம்!**

- என்ற முழக்கத்தோடு

தோழர்களே!

சேலத்துக்கு திரள தயாராவீர்!

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

*தோழர்கள் அனைவரும் மோசமான குற்றங்களை இழைத்த கிரிமினல்கள் போலவே நடத்தப்பட்டனர். அரைக்கால், அரைக் கைசட்டை, சட்டையில் வில்லை என்று அவமதிக்கப்பட்டனர். தோட்ட வேலை, சமையல் கூடத்தில் பாத்திரம் கழுவுதல், அதிகாரிகளுக்கு பணிவிடை செய்யும், வேலைகளை ஜாதி ஒழிப்பு இலட்சியத்துக்காக சிறைக்கு வந்த இந்த தோழர்களுக்கு சிறை அதிகாரிகள் மனிதாபிமானமே இல்லாமல் அளித்தனர்.*

- *பெரும் வசதி படைத்த நிலவுடைமையாளர்களான நீடாமங்கலம் அ. ஆறுமுகம், சிதம்பரம் கு. கிருட்டிண சாமி, ஆனைமலை நரசிம்மன் - சிறை உடை அணிந்த தோடு, சிறையில் கூட்டி சுத்தம் செய்தல், பாத்திரம் கழுவுதல், புல் வெட்டுதல் போன்ற வேலைகளை செய்யும்படி கொடுமை படுத்தப்பட்டனர். அந்த காலத்திலேயே வருமானவரி செலுத்தி வசதியான நிலையிலிருந்த வர்த்தகர்கள் வேலூர் திருநாவுக்கரசு, திருச்சி வீரப்பா போன்றவர்களுக்கு அவரது வயது மூப்பையும் கருத்தில் கொள்ளாமல் அதிகாரிகளுக்கு 'ஏவலர்' வேலை செய்ய பணிக்கப்பட்டனர்.*
- *அப்போது சிறையில் மின்விசிறிகள் கிடையாது. சிறுநீர் கழிப்பதற்கு மண்சட்டி, சுட்டெரிக்கும் வெய்யிலின் கொடூரம், வயிற்றுப் புண் உண்டாக்கும் மோசமான புழுக்கள் மிதக்கும் கூழ், கஞ்சி உணவு, உடல்நலம் கெட்டு சிறைக்குள்ளேயே மரணத்தின் எல்லைக்கு வந்துவிட்ட 13 தோழர்களை, தன்னை காப்பாற்றிக் கொள்ள சிறை நிர்வாகம் தண்டனை காலத்துக்கு முன்பே விடுதலைசெய்தது. ஒரே வாரத்துக்குள் அவர்கள் இறந்து போனார்கள்.*
- *சிறைக்குள்ளேயே அயந்து தோழர்கள் மரணமடைந் தனர். விடுதலையான ஒரு மாதத்துக்குள்ளேயே பல தோழர்கள் மரணத்தை தழுவினர். ஜாதி ஒழிப்புப் போராட்டத்தில் பெரியார் இயக்கம் கொடுத்த களப்பலி 18 பேர்!*
- *தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி அடுத்தடுத்த நாள் களிலேயே சிறைக்குள் மாண்டனர். சிறையில் மாண்ட செய்தி வெளியே கசிந்து பெரும் பதட்டம் உருவானது. பட்டுக்கோட்டை இராமசாமியின் உடலை உறவின ரிடம் ஒப்படைக்காமல், சிறை நிர்வாகம் சிறைக்குள்ளே புதைத்தது. அன்னை மணியம்மையார் வெகுண்டு எழுந்தார். அமைச்சர் பக்தவத்சலத்திடம் சென்று, "உயிரோடு அனுப்பினோம்; பிணத்தைக் கூட தர மாட்டீங்களா?" என்று கேட்டார். அதற்குப் பிறகு பிணத்தைத் தோண்டி எடுத்து, அழுகிய நிலையில் அதிகாரிகள் கொடுத்தார்கள்.*
- *கருஞ்சட்டைத் தொண்டர்கள், ஜாதி ஒழிப்புக்கு உயிர்ப்பலி தந்த 2 தோழர்களின் சடலங்களை தோளில் சுமந்து வர திருச்சியில் உணர்ச்சி மிக்க இறுதி ஊர்வலம் நடந்தது. பல இளைஞர்கள், ஜாதி ஒழிப்பு வீரர்களின் சடலத்துக்கு முன் ஜாதி மறுப்புத் திருமணங்களையே செய்வோம் என்று உறுதி ஏற்றனர். சொல்லியதை செய்தும் காட்டினார்கள். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மண்ணச்சநல்லூர் அரங்கரசன், மகுடஞ்சாவடி கிள்ளி வளவன், டி.டி. வீரப்பாவின் மகன் ஜனார்த்தனம் ஆகியோரை உதாரணத்துக்குக் கூறலாம். பல இளைஞர்களுக்கு பெரியாரே பெண் பார்த்தார். தலைமை தாங்கி திருமணங்களையும் நடத்தி வைத்தார்.*
- *அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் ஒரு ஊரில் ஒரு இடத்தில் என்ற அளவில் நடைபெறவில்லை. ஒவ்வொரு ஊரிலும் ஒரே நாளில் பல இடங்களில் எரிக்கப்பட்டன. 'விடுதலை' நாளேட்டில் வந்த தகவல்படி, சென்னையில் - 35 இடங்கள்; வடார்க்காடு மாவட்டம் - 30 இடங்கள்; தென்னார்க்காடு மாவட்டம் - 26 இடங்கள்; சேலம் மாவட்டம் - 41 இடங்கள்; கோவை மாவட்டம் - 14 இடங்கள்; இராமநாதபுரம் மாவட்டம் - 4 இடங்கள்; மதுரை மாவட்டம் - 13 இடங்கள்; நெல்லை மாவட்டம் - 8 இடங்கள்; தர்மபுரி - 18 இடங்கள்; செங்கல்பட்டு - 9 இடங்கள்; கன்யாகுமரி - 5 இடங்கள்; திருச்சிராப்பள்ளி - 107 இடங்கள்; தஞ்சாவூர் - 161 இடங்கள்; புதுச்சேரி - 6 இடங்கள்; பெங்களூர் - ஒரு இடம்; ஆந்திரா - ஒரு இடம்.*

*அரசியல் சட்டத்தை எரிப்பவர்களுக்கு 3 ஆண்டு சிறை என்று தமிழ்நாட்டில் பெரியார் போராட்ட அறிவிப்புக்குப் பிறகு அவசரமாக சட்டம் கொண்டு வரப்பட்டது.*

*சட்டத்தை துச்சமென மதித்து பெரியார் ஆணை ஏற்று 10,000 தோழர்கள் சட்டத்தை எரித்தார்கள். 3000க்கும் மேலாக கைதானார்கள்.*

*ஜாதி ஒழிப்பு வரலாற்றில் புரட்சிக்கரமான அத்தியாயங்கள் இவை.*

*அந்த நவம்பர் 26இல் ஜாதி ஒழிப்பு வீரர்களின் தியாகத்தைப் போற்றி ஜாதி ஒழிப்புப் போராட்டத்தை முன்னெடுக்க உறுதி ஏற்போம்!*

*(தகவல்கள்: கோவை மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட திருச்சி செல்வேந்திரன் எழுதிய அரசியல் சட்ட எரிப்புப் போராட்ட வரலாற்று நூலிலிருந்து)*

**2017ஆம் ஆண்டு கழக நாள்காட்டி தயாராகிறது!**

திராவிடர் விடுதலைக் கழகத்தின் 2017ஆம் ஆண்டுக்கான நாள்காட்டிகள் தயாராகி வருகின்றன.

புதிய பொலிவோடு – அழகிய வண்ணங்களில் – சமுதாயத் தலைவர்களின் படங்கள் – சிந்தனைகள் – வரலாற்றுக் குறிப்புகளுடன்...

நாள்காட்டியின் விலை : ரூ. 60

முன் பதிவு செய்வோருக்கு : ரூ. 50

தோழர்கள் விரைந்து முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முன்பதிவு எண்ணிக்கைக்கேற்பவே நாள்காட்டிகள் அச்சிடப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புக்கு :

தபசி. குமரன், தலைமைக் கழகச் செயலாளர், பேசி: 9941759641

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 25th November 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN